அல்ல. கூடுமானவரையில் அங்கஹீனமானவர்கள் எந்த வேலைக்குத் தகுதியோ அந்த வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்றுதான் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அதுகுறித்தும் அரசாங்கத்தினால் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

ஆசிரியர்கள் சம்பளமும், படியும்

*383 கேள்வி.—திரு. அ. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மலைப் பிரதேசங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் ஹில் அலவன்ஸை உயர்த்தக் கோரி ஆனைமலை ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன் 13—4—1965-ல் கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) In June 1961, the Government had already sanctioned the Hill allowance to the teachers employed in hilly tracts like the Nilgiris, Palni, Anamalai Hills and Kolli Hills at the rates admissible under the rules. Hence no action was necessary on the above request.

* 384 *Q*.—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of trained Secondary Grade or Senior Basic teachers employed in Panchayat Unions, Local Bodies and Private Schools getting Higher Grade or Junior Basic scale; and

(*b*) will the Government come forward to provide Secondary Grade scale for them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) About 5,000.

(*b*) No.

திரு. எம். எஸ். செல்வராஜன்: ஏராளமான செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர் கிரேடு சம்பளம் பெற்று வேலை செய்யக்கூடிய ஒரு நிலைமை ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் அன்ட்ரெயின்டு ஆசிரியர்களும் வேலை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இம்மாதிரி நிலைமை பல பகுதிகளில் இருக்கிறது. இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து அந்தப் பகுதிகளில் செகன்டரி கிரேடு ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு வழிவகை செய்வது பற்றி யோசிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பள்ளிகளில் எத்தனை செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்குப் பணியாற்றுகிறவர்களுக்கு அதற்குத் தகுந்த சம்பள விகிதம் கொடுக்கப்பட்டு வருகிறது.